**வெருகல் பிரதேச சபை - 2022**

----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெருகல் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெருகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள்

தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 **ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டுக்கான 09 நிலையான வைப்புக்கான கூட்டுமொத்த வட்டி வருமானம் ரூபா 52,766 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குறித்த வேறுபாடு அடுத்த வருட நிதிகூற்றுக்களில் சீராக்கப்படும் | நிதிகூற்றுக்களில் சீர் செய்யப்படல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 824,831 நீதிமன்ற தண்டப்பணம் வருடத்தின் வருமானமாக நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | இத்தொகையானது அடுத்த நிதி யாண்டில் சீர் செய்யப்படும். | நிதிகூற்றுக்களில் சீர் செய்யப்படல் வேண்டும். |
| இ) | மீளாய்வாண்டில் ரூபா 108,370 இற்கு விற்பனை செய்யப்பட்ட 07 எண்ணிக்கையான உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பவற்றின் கிரயப் பெறுமதிகள் இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கிரயப்பெறுமதி அடுத்தவருடம் தாயரிக்கப்படும் நிதியாண்டில் சீர் செய்யப்படும். | நிதிகூற்றுக்களில் சீர் செய்யப்படல் வேண்டும். |
| ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்துக்காக மீளப்பெற வேண்டிய சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களின் கொடுப்பனவு ரூபா 1,544,355 தொகையானது கிடைக்கப்பெற வேண்டிய வருமானமாக கணக்கிடப்பட்டிருக் கவில்லை. | இத்தொகையானது அடுத்தவருடம் தாயரிக்கப்படும் நிதியாண்டின் கணக்குகளில் சீர் செய்யப்படும். | வருமதியாக காட்டப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| உ) | உள்ளூராட்சி திணைக்களம், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தினால் மீளாய்வாண்டில் அன்பளிப்புச் செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 1,063,003 ஆன பொருட்கள் உரிய சொத்துக்களின் பெறுமதியுடன் சேர்க்கப் பட்டிருக்கவில்லை | குறித்த தொகையானது அடுத்தவருடம் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டு சீர் செய்யப்படும். | கணக்குகள் சரி செய்யப்படல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஊ) | மீளாய்வாண்டு காலப்பகுதியில் சபையினால் ரூபா 7,093,806 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் நிலையான சொத்தில் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை | இவ்வேலைகள் நிறைவடைந்த பின்பு அடுத்தவருடம் தாயரிக்கப்படும் நிதியாண்டில் கணக்கீடு செய்யப்படும் | கணக்குகள் சரி செய்யப்படல் வேண்டும் |
| எ) | மீளாய்வாண்டு காலப்பகுதிக்கான கடை வாடகை நிலுவையாக ரூபா 347,903 கணக்கீடு செய்யப்பட்டிருக் கவில்லை. | அடுத்த வருடம் தாயரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் சீர் செய்யப்படும். | கணக்குகள் சரி செய்யப்படல் வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 58,903,932 பெறுமதியான காணிகளும் கட்டிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம், மீள்மதிப்பீட்டு ஆவணங்கள் மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 58,903,932 பெறுமதியான காணி கட்டிடங்கள் தொடர்பாக அவற்றிற்கான உறுதி மற்றும் காணி ஆவணங்கள் சபையிடம் தற்போது இல்லை. எனினும் அவற்றினை பெற்றுக் கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் சான்றாதாரங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| i நி.பி 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 244,352 சீர் செய்யப்படடிருக்கவில்லை. | உரிய நிதி நடைமுறைகளை பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| ii நி.பி 371 | 2008 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட ரூபா 625,999 முற்பணங்கள் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை | உரிய நிதி நடமுறைகளை பின்பற்றி சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணங்கள் தீரக்கப்படல் வேண்டும் |

ல.

### 1.7.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி (PSDG) செயற்திட்டத்தின் கீழ் மாவடிச்சேனை பாடசாலை வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்தில் செலுத்தப்பட வேண்டிய VAT தொகை ரூபா 114,852 இற்றைவரை கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகையானது உரிய நிதி நடைமுறைகளை பின்பற்றி வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | உரிய நடைமுறைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 631,836 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 1,060,101 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” |
| i) | வீதவரியும் வரியும் | 2 | -- | -- | -- | 2 | -- | -- | -- |
| ii) | வாடகை | 817 | 2,053 | 1,055 | 998 | 1,590 | 1,590 | 1,378 | 212 |
| iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 407 | 231 | 231 | -- | 348 | 272 | 272 | -- |
| iv) | ஏனைய வருமானம் | 1,522 | 1,698 | 1,698 | -- | 1,008 | 320 | 320 | -- |
| | | 2,748 | 3,982 | 2,984 | 998 | 2,948 | 2,182 | 1,970 | 212 |

**2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) வாடகை | | |
| i) பிரதேச சபையினால் ரூபா 725,254 பெறுமதியான கடை வாடகை நிலுவை, குடிநீர் விநியோக கட்டணம் மற்றும் இயந்திர வாடகை நிலுவை என்பன உரிய நபர்களை இனங்காண முடியாமையினால் 03 தொடக்கம் 10 ஆண்டுகளாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த 725,254 பெறுமதியான நிலுவைகள் தொடர்பாக உரிய நபர்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் இனங்காணப்பட்டு உரிய நிதி நடைமுறைகளை பின்பற்றி மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| ii) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,210,000 நிலுவையாகக் காணப்பட வேண்டிய போதிலும் ஐந்தொகையில் வாடகை நிலுவையாக ரூபா 998,000 என வெளிப்படுத்தப்பட்டமையினைக் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | குறித்த குறைபாடு அடுத்தவருடம் தாயரிக்கப்படும் நிதியாண்டில் சீராக்கம் செய்யப்படும். | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**
**சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள் | | |
| 11 எண்ணிக்கையான வாகனங்கள் 02 தொடக்கம் 15 ஆண்டுகள் வரை சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களை சபையின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் எடுக்கப்படும். | வாகனங்களை சபையின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| ஆ) பயன்படுத்தப்படாத சொத்துக்கள் | | |
| i) இலங்கை துறைமுக முகத்துவாரப் பகுதியில் அமைந்துள்ள ரூபா 1,483,472 பெறுமதியான ICE தொழிற்சாலைக் கட்டிடம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | இப்பகுதி மீனவர்களின் நன்மைகருதி தேநீர் கடை ஒன்றிற்கு வழங்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ii) சபையில் காணப்படும் 04 உழவியந்திரங்களும், 01 நீர்த்தாங்கியும் 04 தொடக்கம் 01 | குறித்த வாகனங்களை திருத்துவதற்கு போதியளவு நிதி இல்லாத காரணத்தினால் திருத்தம் | பழுதடைந்த வாகனங்கள திருத்தம் செய்ய அல்லது உரிய நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது பயனற்றுக் காணப்படுகின்றது. | செய்யப் படவில்லை. | மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| iii) | சபைக்குச் சொந்தமாக 04 இறங்குதுறைகள் காணப்பட்ட போதிலும் 02 இறங்குதுறைகள் பாவனைக்குட்படுத்தப்படாது காணப்படுவதனால் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். குறித்த இறங்குதுறைகளை திருத்தியமைத்து பயன் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முகாமையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இப்பாதைகளில் மூன்றை திருத்தியமைப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு மதிப்பீட்டறிக்கை அனுப்பப்பட்டுள்ளதுடன் அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் புதிய பாதை ஒன்றினை பெற்றுகொள்வதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆந் திகதிய க.செ. பொது/2018/61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சபையினால் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2030ம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |